ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2189/56 - 2020 අගෝස්තු මස 22 වැනි සෙනසුරාදා - 2020.08.22
*2189/56 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 22 ஆந் திகதி சனிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66ஆ (2) ஆம் பிரிவின் கீழ் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

கேட்டு விலகல் காரணமாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தவிசாளர் பதவி, வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும் ;

மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 66ஆ(2)ஆம் பிரிவின் கீழ், தவிசாளர் பதவி வகித்த செல்லையா பிறேமகாந் என்பவர் அங்கம் வகிக்கின்ற இலங்கைத் தமிழரசுக் கட்சி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் தவிசாளர் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்த வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவரும் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ளவருமான தவிசாளர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு அருளானந்தம் தவகுமாரன் என்பவரைப் பெயர் குறிக்கும் தீர்மானத்தை அறிவித்துள்ளாராதலாலும் ;

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான காந்திராசா காந்தீபன் ஆகிய நான், 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66ஆ(2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு அருளானந்தம் தவகுமாரன் என்பவர் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**கா. காந்தீபன்,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
புதுக்குடியிருப்பு பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
முல்லைத்தீவு,
*2020, ஓகத்து 21.*

1A - G 32649— 31 (2020/08) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*